www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# சமச்சீர்க்கல்வி
# பாடத்திட்டம்

பாடத்திட்டம்
ஏழாம் வகுப்பு – தமிழ்
பருவம் : 3

www.Padasalai.Net

## தமிழ்நாடு அரசு
## பாடநூல் பாடத்திட்டம்

Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பாடத்திட்டம்

# ஏழாம் வகுப்பு – தமிழ்

# பருவம் : 3

அன்பிற்கினிய ஆசிரியப் பெருமக்களே,

தமிழ்நாடு அரசின் சமச்சீர் கல்வித் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட மூன்றாம் பருவம், ஏழாம் வகுப்பு தமிழ்ப் பாடநூலில் இடம் பெற்றுள்ள பாடங்களுக்கான பாடத்திட்டங்களை அதற்குரிய படிநிலைகளின் அடிப்படையில் எழுதியுள்ளேன்.

படித்துப் பாருங்கள். உங்களுக்கு உதவும் என்றால் பயன்படுத்திக் கொள்ளுங்கள். பிழைகள் இருப்பின் தெரியப்படுத்துங்கள். அடுத்த மின்பதிப்பில் திருத்திக் கொள்ள உதவியாக இருக்கும்.

இதை விட இன்னும் சிறப்பாக செய்யலாம் என்ற உங்களது மனக்கருத்துகளையும் தெரியப்படுத்துங்கள்.

தங்களது மேலான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் ஆவலோடு எதிர்நோக்குகிறேன்.

பி.டி.எப். வடித்தில் இருக்கும் இப்பாடத்திட்டத்தைத் தங்களது ஆன்ட்ராய்டு செல்பேசியில் பதிவிறக்கம் செய்து குறிப்பு நோட்டைப் போலவும் இதைப் பயன்படுத்தலாம். கணினியில் பதிவிறக்கம் செய்து கொண்டு இப்பாடத்திட்டத்தை பயிற்சி ஏடு போல் புரோஜக்டர் மூலம் வகுப்பறையிலும் பயன்படுத்தலாம்.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இம்முயற்சி பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

உங்கள் கருத்துகளையும் தெரிவியுங்கள்.

அன்புடன்,

**பா. விஜயராமன்,**

ஆசிரியர்.

coimbatorev6@gmail.com

Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பாடத்திட்டம்

## பாடம் : தமிழ் - VII

**1. பாடத்தலைப்பு** : 1. பொங்கல் வழிபாடு (செய்யுள்)

**2. அலகு** : 1

**3. அலகின் தன்மை** : தனித்து நிற்றல்

**4. கற்றல் வகை** : தனிக்கற்றல் மற்றும் குழுக்கற்றல்

**5. கற்றல் திறன்கள்** : பொங்கல் வழிபாடு, படையல் குறித்து அறிதல்.
பொங்கல் கொண்டாடுவதன் நோக்கம் குறித்து அறிதல்.
கவிதை நயத்தை உணர்ந்து போற்றுதல்.

**6. பாட அறிமுகம்** :


**அ) ஆர்வமூட்டல்** : *பொங்கல் விழா நன்றியை வெளிப்படுத்தும் விழாவாகும். விவசாய பூமியான நமதுப் பகுதியின் பண்பாட்டு விழா பொங்கலாகும். பொங்கலின் முதல் நாள் கதிரவனுக்கும், உழவர்க்கும் நன்றி கூறும் விதமாகவும், இரண்டாம் நாள் உழவுக்குத் துணை நின்ற மாடுகளுக்கு நன்றி கூறும் விதமாகவும், மூன்றாம் நாள் பெரியோர்களிடம் ஆசியும், உறவினர்கள் நண்பர்களிடம் வாழ்த்துப் பெறும் நாளாகவும் கொண்டாடப்படுகிறது. பொங்கல் அறுவடைத் திருநாள் என்றும் கூறப்படுகிறது.*

**ஆ) ஆர்வமூட்டும் வினா**: இந்தியாவின் வடபகுதியில் கொண்டாடப்படும் பொங்கல் விழா எப்பெயரால் வழங்கப்படுகிறது என்று நீ அறிவாயா? ( விடை : மகர சங்கராந்தி)

**7. புதிய சொற்கள்** :

| | |
|---|---|
| திரு | – செல்வம் |
| நிவேதனம் | – படையல் |
| கனகம் | – பொன் |
| புரவி | – குதிரை |
| கோ | – அரசன் |

**8. மனவரைபடம்** :




**9. தொகுத்தல்** : கதிரவனுக்குப் படையலிடும் பொருட்களைப் பட்டியலிடுக.

**10. வழங்குதல்** : உழவர் திருநாள், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் குறித்து தங்களது அனுபவங்களை மாணவர்கள் குழுவாக விவாதித்துக் கூறச் செய்தல்.

www.Padasalai.Net

Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**11. வலுவூட்டல்** : மீத்திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டு மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குப் வாய்விட்டுக் கவிதைப் படிக்கும் பயிற்சியளித்தல்.

**12. மதிப்பீடு** :

1. கனகம் என்பதன் பொருள் என்ன?
2. புரவி என்பதன் பொருள் என்ன?
3. கதிரவனுக்கப் படைக்கப்படும் பொருள்கள் யாவை?
4. கதிரவனிடமிருந்துப் பிறந்தவை யாவை?
5. பாரதிக்குப் பின் கவிதை மரபில் திருப்பம் ஏற்படுத்திய கவிஞர் யார்?

**13. குறைதீர்க் கற்பித்தல்:** மனவரைபடத்தை ஒவ்வொரு மாணவராக விளக்கிக் கூறச் செய்தல்.

**14. வகையறி மதிப்பீடு:** பொங்கல் வாழ்த்து அட்டை தயாரித்தல்.

**15. தொடர்பணி** : *நான் விரும்பும் பொங்கல் விழா* என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

**16. நாள்** :

**17. ஆசிரியர் கையொப்பம்** :

**18. தலைமையாசிரியர் கையொப்பம் :**

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பாடத்திட்டம்

## பாடம் : தமிழ் - VII

**1. பாடத்தலைப்பு** : 1. இயற்கை வேளாண்மை (உரைநடை)

**2. அலகு** : 1

**3. அலகின் தன்மை** : மரம் மற்றும் கிளை

**4. கற்றல் வகை** : தனிக்கற்றல் மற்றும் குழுக்கற்றல்

**5. கற்றல் திறன்கள் :**

1. இயற்கை வேளாண்மைக்கும், ரசாயன வேளாண்மைக்கும் உள்ள வேறுபாடுகளை அறிதல்.
2. இயற்கை வேளாண்மையின் கூறுகளை அறிதல்.
3. இயற்கை வேளாண்மை செய்யும் முறைகள் மற்றும் பஞ்ச கவ்வியம் தயாரிப்புக் குறித்து அறிதல்.

**6. பாட அறிமுகம் :**

**அ) ஆர்வமூட்டல்** : *அடி மண்ணுக்கு*
*நடு மாட்டுக்கு*
*நுனி மனிதர்க்கு – என்பதன் பொருள் என்ன? என்ற புதிரை விடுவிக்கக் கூறுதல்.*

*அடி மண்ணுக்கு என்பது நெற்பயிரின் அடிப்பகுதி மக்கி மண்ணுக்கு உரமாகும். நடு மாட்டுக்கு என்பது நெற்பயிரின் நடுப்பகுதியான வைக்கோல் மாட்டுக்கு உணவாகப் பயன்படும். நுனி மனிதர்க்கு என்பது நெற்பயிரின் நுனிப்பகுதியான நெல் மணிகள் மனிதர்க்கு உணவாகப் பயன்படும். இயற்கை வேளாண்மையின் சிறப்பைச் சொல்வது இப்புதிரின் சிறப்பம்சமாகும்.*

**ஆ) ஆர்வமூட்டும் வினா**: நமது பாரம்பரிய நெல் வகைகளின் பெயர்களை நீ அறிவாயா? என்ற வினாவை எழுப்பி மாப்பிள்ளைச் சம்பா, காட்டுயானம், கருங்குறுவை, சீரகச் சம்பா, கைவரச் சம்பா, பூங்கார், தங்கச் சம்பா, கவுணி, கருவாச்சி போன்ற நெல் வகைகளை மாணவர்களிடம் அறிமுகப்படுத்துதல்.

**7. புதிய சொற்கள் :**

| | |
|---|---|
| கோவை – கோயம்புத்தூர் | பேராசிரியர் |
| இயற்கை வேளாண்மை | சான்று பெற்ற விதைகள் |
| தொழு உரம் | அங்கக வேளாண்மை |
| பசிப்பிணி | ஆடிப்பட்டம் |
| யூரியா | பாஸ்பேட் |
| பொட்டாசியம் | பஞ்ச கவ்வியம் |
| கோமயம் | பிண்ணாக்கு |
| சணப்பை | அவுரி |
| கொளஞ்சி | |


Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**8. மனவரைபடம் :**




**9. தொகுத்தல் :**

இயற்கை வேளாண்மைக்கும், ரசாயன வேளாண்மைக்கும் உள்ள வேறுபாடுகளைத் தொகுத்தல் :

| வ. எண் | இயற்கை வேளாண்மை | இரசாயன வேளாண்மை |
|---|---|---|
| 1. | மண் வளம் குன்றா வேளாண்மை | மண் வளம் கெடும் வேளாண்மை |
| 2. | கடன்படா வேளாண்மை | கடன்படும் வேளாண்மை |
| 3. | உணவு மருந்தாகும் | உணவு நஞ்சாகும் |
| 4. | உயிரியல் பன்மயம் காக்கப்படும் | உயிரிகள் பாதிப்படையும் |
| 5. | சுற்றுச்சூழலைக் காக்கும் | சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். |
| 6. | தொழுஉரம் பயன்பாடு | இரசாயன உரம் பயன்பாடு |
| 7. | பூச்சிக்கொல்லி : பஞ்சகவ்வியம் | பூச்சிக்கொல்லி : வேதியியல் நச்சுகள் |
| 8. | நோய்த் தீர்க்கும் | நோய்களை உருவாக்கும் |

**10. வழங்குதல் :**

கீழ்கண்ட தலைப்புகளில் மாணவர்களைக் கருத்துகளைத் தொகுத்து வழங்குமாறுக் கூறுதல் :

1. இயற்கை வேளாண்மையின் கூறுகள்
2. இரசாயன வேளாண்மையின் தீமைகள்
3. நிலத்தைப் பண்படுத்துதல்
4. பயிரிடும் முறைகள்
5. பஞ்சகவ்வியம் தயாரித்தல்
6. பயிர்களைக் காத்தல்

**11. வலுவூட்டல் :**

மீத்திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டு மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

**12. மதிப்பீடு :**

1. இயற்கை வேளாண்மையின் கூறுகள் யாவை?
2. இரசாயன வேளாண்மையின் தீமைகள் யாவை?
3. எவ்வாறு நிலத்தை உழுதல் வேண்டும்?

Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. பஞ்சகவ்வியம் என்றால் என்ன?
5. தொழுஉரம் என்றால் என்ன?
6. பயிர்களை எவ்வாறு காக்க வேண்டும்?
7. இயற்கை வேளாண்மையின் நன்மைகள் யாவை?

**13. குறைதீர்க் கற்பித்தல்:**

மனவரைபடத்தை ஒவ்வொரு மாணவராக விளக்கிக் கூறச் செய்தல். தேவையான இடங்களில் ஆசிரியர் வழிகாட்டுதல்.

**14. வகையறி மதிப்பீடு:**

நமது தமிழகத்தில் பயிரிடப்பட்ட பாரம்பரிய நெல் வகைகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் மருத்துவப் பயன்கள் குறித்த விவரங்களை நூலகம் சென்று திரட்டி வரக் கூறுதல்.

| வ. எண் | நெல் வகை | தீர்க்கும் நோய் / சிறப்புகள் |
|---|---|---|
| 1. | மாப்பிள்ளைச் சம்பா | சர்க்கரை நோய் |
| 2. | கருவாச்சி | சர்க்கரை நோய் |
| 3. | கருங்குறுவை | யானைக்கால் |
| 4. | பூங்கார் | கர்ப்பிணிகளுக்கு ஏற்றது. |
| 5. | கவுணி | சுவையான பலகாரங்கள் செய்ய ஏற்றது. |

**15. தொடர்பணி :**

பாரம்பரிய நெல் வகைகளைப் பயிரிடும் விவசாயிகளைக் கண்டு அவர்களிடம் இயற்கை வேளாண் முறைகள் விவாதித்து வரச் செய்தல்.

**16. நாள் :**

**17. ஆசிரியர் கையொப்பம் :**

**18. தலைமையாசிரியர் கையொப்பம் :**

Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பாடத்திட்டம்

## பாடம் : தமிழ் - VII

**1. பாடத்தலைப்பு** : 2. திருக்குறள் (செய்யுள்)

**2. அலகு** : 2

**3. அலகின் தன்மை** : தனித்து நிற்றல்

**4. கற்றல் வகை** : தனிக்கற்றல் மற்றும் குழுக்கற்றல்

**5. கற்றல் திறன்கள்** :

1. கல்வியின் சிறப்புகள் குறித்து அறிதல்.
2. கற்றோர், கல்லாதோர் குறித்த வேறுபாடுகளை அறிதல்.
3. கற்கும் முறைகள், கல்வியினால் பெறும் நன்மைகள் குறித்து அறிதல்.

**6. பாட அறிமுகம்** :

**அ) ஆர்வமூட்டல்** : *கல்வியினால் உயர்ந்த அம்பேத்கார், மு. வரதராசனார், இராதாகிருஷ்ணன் ஆகியோர் குறித்து மாணவர்களுக்குக் கூறுதல்.*

*கற்கை நன்றே! கற்கை நன்றே!*
*பிச்சைப் புகினும் பிச்சைப் புகினும்*
*கற்கை நன்றே! கற்கை நன்றே! – என்ற அதிவீரராமப் பாண்டியரின் வரிகளை மாணவர்களுக்குக் கூறுதல்.*

*…மையில் கல்!*

*நூல் பல கல்! – என்பன போன்ற ஔவையின் மொழிகளைக் கூறுதல்.*
*கல்வியிற் சிறந்த தமிழ்நாடு – என்ற பாரதியின் வரியைக் கூறுதல்.*
*கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை*
*கற்பதுவே உன் முதற் கடமை – என்ற பாரதிதாசனின் வரிகளைக் கூறுதல்.*

**ஆ) ஆர்வமூட்டும் வினா**: *கல்வியில்லாத பெண்கள் களர்நிலம்! அங்கே புல் விளைந்திடலாம்! நல்ல புதல்வர்கள் விளைவதில்லை!* என்று சொன்னவர் யாரென்று அறிவாயா?

**7. புதிய சொற்கள்** :

| | | | |
|---|---|---|---|
| கசடு | – குற்றம் | எண் | – கணக்கு |
| எழுத்து | – இலக்கண இலக்கியம் | உவப்ப | – மகிழ |
| கடையர் | – தாழ்ந்தவர் | மாந்தர் | – மக்கள் |
| சாந்துணையும் | – சாகும் வரையிலும் | ஏமாப்பு | – பாதுகாப்பு |
| காமுறுவர் | – விரும்புவர் | மாடு | – செல்வம் |
| விழுச்செல்வம் | – சிறந்த செல்வம் | | |


**8. மனவரைபடம்** :

Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com






**9. தொகுத்தல் :**

மாணவர்களைக் கீழ்காணும் தலைப்புகளில் கருத்துகளைத் தொகுக்கக் கூறுதல் :

2. கல்வியின் சிறப்புகள் 1. கற்றல் முறைகள்

3. கல்லாமையின் இழிவு 4. கற்பதால் கிட்டும் நன்மைகள்

**10. வழங்குதல் :**

மாணவர்கள் தாங்கள் தொகுத்தக் கருத்துகளைக் குழுவாக வழங்கக் கூறுதல்.

**11. வலுவூட்டல் :**

மீத்திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டு மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

**12. மதிப்பீடு :**

1. கண்ணுடையர் என்பவர் யார்?
2. புலவர் தொழிலாக வள்ளுவர் குறிப்பிடுவதைக் கூறுக.
3. யார் கடையர் என்று வள்ளுவர் கூறுகிறார்?
4. அழியாத செல்வது எது? ஏன்?
5. மணற்கேணிக்கு உவமையாகக் கூறப்படுவது எது?

**13. குறைதீர்க் கற்பித்தல்:**

மனவரைபடத்தை ஒவ்வொரு மாணவராக விளக்கிக் கூறச் செய்தல்.

**14. வகையறி மதிப்பீடு:**

கல்வியின் சிறப்புகள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

**15. தொடர்பணி :**

திருக்குறள் போன்று கல்வியின் சிறப்பை விளக்கும் நாலடியார் பாடல்களை நூலகம் சென்று திரட்டி வருக.

**16. நாள் :**

**17. ஆசிரியர் கையொப்பம் :**

**18. தலைமையாசிரியர் கையொப்பம் :**

www.Padasalai.Net
Downloaded From www.nagaicollege.com
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பாடத்திட்டம்

## பாடம் : தமிழ் - VII

**1. பாடத்தலைப்பு** : 2. தமிழக விளையாட்டுகள் (உரைநடை)

**2. அலகு** : 2

**3. அலகின் தன்மை** : மை சிந்தும் வகை

**4. கற்றல் வகை** : தனிக்கற்றல் மற்றும் குழுக்கற்றல்

**5. கற்றல் திறன்கள்** :

1. விளையாட்டின் நோக்கங்கள் குறித்து அறிதல்.
2. சிறுவர் மற்றும் சிறுமியர் விளையாடும் விளையாட்டுகள் குறித்து அறிதல்.
3. பண்டைய தமிழகத்தில் விளையாடப்பட்ட விளையாட்டுகள் குறித்து அறிதல்.
4. விளையாட்டின் நன்மைகள் மற்றும் அவசியம் குறித்து அறிதல்.

**6. பாட அறிமுகம்** :

**அ) ஆர்வமூட்டல்** :

*காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு*
*கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு!*
*மாலை முழுவதும் விளையாட்டு – என்று*
*வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா!*

*ர்ற பாரதியாரின் வரிகளைப் பாடிக் காட்டுதல்.*

**ஆ) ஆர்வமூட்டும் வினா**: *மைதானத்தில் விளையாடுதல், கணினியில் விளையாடுதல் – இவற்றில் எது சிறந்தது என நீ கருதுகிறாய்? காரணம் கூறுக.*

**7. புதிய சொற்கள்** :

| | | |
|---|---|---|
| போட்டியிடுதல் | மனப்பான்மை | பட்டறிவு |
| ஆடவர் | மற்போர் | ஏறுதழுவுதல் |
| ஆமூர் மல்லன் | நற்கிள்ளி | புறநானூறு |
| வட்டாடுதல் | கிளிஞ்சல்கள் | தமுக்கம் மைதானம் |
| கோழியூர் | சல்லிக்கட்டு | தற்காப்புக் கலை |
| சடுகுடு – கபடி | வழுக்கு மரம் | உறியடித்தல் |
| ஆடவர் | | |

**8. மனவரைபடம்** :


www.Padasalai.Net

Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com






www.Padasalai.Net

Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**9. தொகுத்தல் :**

மாணவர்களை சிறுவர், சிறுமியர், ஆடவர், மகளிர், விளையாடிய விளையாட்டுகளையும், இன்றைய விளையாட்டுகளையும் தொகுக்கச் செய்தல் :

| வ. எண் | விளையாடுபவர்கள் | விளையாட்டுகள் |
|---|---|---|
| 1. | சிறுவர் | கிட்டிப்புள், பம்பரம், கள்ளன் காவலன் |
| 2. | சிறுமியர் | பூப்பறித்தல், பல்லாங்குழி, தாயம் |
| 3. | ஆடவர் | ஏறுதழுவுதல், மற்போர், வேட்டையாடுதல் |
| 4. | மகளிர் | வட்டாடுதல், கழங்கு, அம்மானை |
| 5. | இன்றைய மக்கள் | மட்டைப்பந்து, கைப்பந்து, கணினி விளையாட்டுகள் |

**10. வழங்குதல் :**

மாணவர்களைப் பின்வரும் தலைப்புகளில் கருத்துகளைத் தொகுத்து வழங்கச் செய்தல் :

1. விளையாட்டின் நோக்கங்கள்
2. சிறுவர், சிறுமியர் விளையாட்டுகள்
3. ஆடவர், மகளிர் விளையாட்டுகள்
4. வீர விளையாட்டுகள், விலங்குப் போர்கள்
5. விளையாட்டின் நன்மைகளும் பயன்களும்

**11. வலுவூட்டல் :**

மீத்திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டு மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குச் செய்யுளை வாய்விட்டுப் பாடும் பயிற்சியளித்தல்.

**12. மதிப்பீடு :**

1. முல்லை நிலத்தில் விளையாடப்பட்ட விளையாட்டு எது?
2. சிறுமியர் விளையாடும் விளையாட்டுகள் சில கூறுக.
3. புறநானூறு குறிப்பிடும் வீர விளையாட்டு எது?
4. பண்டைய ஆடவர் விளையாடிய விளையாட்டுகள் யாவை?
5. விளையாட்டுக் குறித்து பாரதியார் கூறும் கருத்து என்ன?
6. விளையாட்டின் நன்மைகள் யாவை?
7. விலங்குப்போர் – சிறுகுறிப்பு வரைக.

**13. குறைதீர்க் கற்பித்தல்:**

மனவரைபடத்தை ஒவ்வொரு மாணவராக விளக்கிக் கூறச் செய்தல்.

**14. வகையறி மதிப்பீடு:**

உமது பகுதியில் விளையாடப்படும் விளையாட்டுகளைச் சிறுவர் விளையாடும் விளையாட்டுகள், சிறுமியர் விளையாடும் விளையாட்டுகள், ஆடவர் விளையாடும் விளையாட்டுகள், மகளிர் விளையாடும் விளையாட்டுகள் என வகைப்படுத்திப் பட்டியலிட்டு வருக.

**15. தொடர்பணி :**

*நான் விரும்பும் விளையாட்டு* எனும் தலைப்பில் கட்டுரை வரைக.

**16. நாள் :**

**17. ஆசிரியர் கையொப்பம் :**

**18. தலைமையாசிரியர் கையொப்பம் :**

Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பாடத்திட்டம்

## பாடம் : தமிழ் - VII

**1. பாடத்தலைப்பு** : 3. எங்கள் தமிழ் (செய்யுள்)

**2. அலகு** : 3

**3. அலகின் தன்மை** : தனித்து நிற்றல்

**4. கற்றல் வகை** : தனிக்கற்றல் மற்றும் குழுக்கற்றல்

**5. கற்றல் திறன்கள்** :

1. தமிழின் இனிமை மற்றும் பெருமைகளை அறிதல்.
2. தமிழ்ப்பற்றுக் கொண்டு தமிழ்த்தொண்டில் ஆர்வம் கொள்ளுதல்.
3. பாவேந்தர் பாரதிதாசன் குறித்து அறிதல்.

**6. பாட அறிமுகம்** :


**அ) ஆர்வமூட்டல்** : *ஒருமுறை திரைப்படப் பாடல் எழுதுவதற்காக பாவேந்தர் சென்றார். பாவேந்தர் எழுதிய பாடலில் கமழ்ந்திடும் என்ற சொல்லை ஒலிப்பதிவு செய்யும் போது ழ் என்பதைச் சரியாக ஒலிப்பதிவு செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. இதனால் இசையமைப்பாளர்கள் கமழ்ந்திடும் என்ற சொல்லுக்குப் பதிலாக ழகரம் வராமல் வேறு சொல்லை அமைத்துப் பாடலை மாற்றித் தருமாறு கேட்டனர். தமிழின் சிறப்பு ழகரம் அமைந்த அச்சொல்லை மாற்ற பாவேந்தர் மறுத்து விட்டார். தமிழின் மீது பற்று கொண்டவர் பாவேந்தர் என்பதற்கு இந்நிகழ்வு ஒரு சான்றாகும்.*

**ஆ) ஆர்வமூட்டும் வினா**: *செம்மொழியாகக் கருதப்படும் மொழிகள் எவையென நீ அறிவாயா?*

**7. புதிய சொற்கள்** :

| | | | |
|---|---|---|---|
| கதி | – துணை | பேறு | – செல்வம் |
| நனி | – மிகுதி | தரம் | – தகுதி |
| புவி | – உலகம் | | |

**8. மனவரைபடம்** :




Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**௯. தொகுத்தல் :**

தமிழின் சிறப்புகளாக பாரதிதாசன் கூறுபவைகளைத் தொகுக்க :

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | – அமுதம் | தமிழ் | – கனியின் சாறு |
| தமிழ் | – யாம் பெற்ற பேறு | தமிழ் | – சுவையுள்ள சொற்கள் |
| தமிழ் | – எங்கள் உயிர் | | |

பாரதிதாசன் இயற்றியுள்ள நூல்களைத் தொகுத்தல் :

| பாரதிதாசன் இயற்றியுள்ள நூல்கள் | | |
|---|---|---|
| குடும்ப விளக்கு | பாண்டியன் பரிசு | சேர தாண்டவம் |
| இருண்டு வீடு | தமிழச்சியின் கத்தி | பிசிராந்தையார் |
| குறிஞ்சித் திட்டு | அழகின் சிரிப்பு | தமிழியக்கம் |

**10. வழங்குதல் :**

மாணவர்களைக் கீழ்கண்ட தலைப்புகளில் கருத்துகளைத் தொகுத்து வழங்கக் கூறுதல் :

1. தமிழின் சிறப்புகளாகப் பாரதிதாசன் கூறுபவைகள்
2. தமிழர் செய்ய வேண்டிய கடமைகளாக பாரதிதாசன் கூறுபவைகள்

**11. வலுவூட்டல் :**

மீத்திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டு மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குப் வாய்விட்டுக் கவிதைப் பாடும் பயிற்சியளித்தல்.

**12. மதிப்பீடு :**

1. தமிழின் இனிமையைப் பாரதிதாசன் எதனோடு ஒப்பிடுகிறார்?
2. தமிழ்நாடு எப்போது இருளாகும்?
3. தமிழர் செய்ய வேண்டியவைகளாக பாரதிதாசன் கூறுவன யாவை?
4. பாரதிதாசன் – குறிப்பு வரைக.
5. பாரதிதாசன் இயற்றியுள்ள சில நூல்களின் பெயர்களைக் கூறுக.

**13. குறைதீர்க் கற்பித்தல்:**

மனவரைபடத்தை ஒவ்வொரு மாணவராக விளக்கிக் கூறச் செய்தல்.

**14. வகையுறி மதிப்பீடு:**

இனிமைத் தமிழ்மொழி எமது... என்ற பாடலைப் பாடச் செய்தல்.

**15. தொடர்பணி :**

*தமிழின் சிறப்புக் குறித்து பாரதிதாசன் இயற்றியுள்ள மேலும் சில பாடல்களை நூலகம் சென்று திரட்டி வருக.*

**16. நாள் :**

**17. ஆசிரியர் கையொப்பம் :**

**18. தலைமையாசிரியர் கையொப்பம் :**

Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பாடத்திட்டம்

## பாடம் : தமிழ் - VII

**1. பாடத்தலைப்பு** : 3. ஓவியக்கலை (உரைநடை)

**2. அலகு** : 3

**3. அலகின் தன்மை** : மரம் மற்றும் கிளை

**4. கற்றல் வகை** : தனிக்கற்றல் மற்றும் குழுக்கற்றல்

**5. கற்றல் திறன்கள்** :

1. ஓவியம் என்பதன் பொருள், ஓவியத்தின் அடிப்படைகள் குறித்து அறிதல்.
2. சங்க கால ஓவிய வளர்ச்சி குறித்து அறிதல்.
3. சேர, சோழ, பாண்டியர் கால ஓவிய வளர்ச்சி குறித்து அறிதல்.
4. பல்லவர், நாயக்கர், மராட்டியர் கால ஓவிய வளர்ச்சி குறித்து அறிதல்.
5. ஓவிய ஈடுபாடு கொண்டு மாணவர்கள் ஓவியம் வரைய ஆர்வம் கொள்ளுதல்.

**6. பாட அறிமுகம்** :

**அ) ஆர்வமூட்டல்** :

*மாணவர்களை தென்னை மரத்தின் ஓவியம் வரையக் கூறுதல். முதலில் அவர்கள் பென்சிலால் வரைந்து கொண்டதைச் சுட்டிக் காட்டி அதுதான் கோட்டோவியம் என்பதை அவர்களுக்கு உணர்த்துதல். வண்ணமிட்ட பின் அது ஓவியம் ஆவதைச் சுட்டிக் காட்டி வண்ணம் தீட்ட வண்ணப் பென்சில்கள் மட்டுமல்லாது தூரிகைகள் பயன்படுவதையும் மாணவர்களுக்குக் கூறுதல்.*

*இன்று கணினியில் மாணவர்கள் பயன்படுத்தும் பெய்ண்ட் எனும் மென்பொருள் ஓவியத்தின் டிஜிட்டல் வடிவம் என்பதை மாணவர்களுக்கு ஒப்பிட்டுக் காட்டுதல்.*

**ஆ) ஆர்வமூட்டும் வினா:**

*இந்தியாவின் தலைசிறந்த ஓவியர்கள் சிலரின் பெயர்களைக் கூறுக.*

*(விடை : இராஜா இரவிவர்மா, எம்.எப்.ஹுசைன்)*


**7. புதிய சொற்கள்** :

| | | |
|---|---|---|
| இனக்குழுக்கள் | குகை ஓவியங்கள் | கண்ணெழுத்து |
| கோட்டோவியங்கள் | நடுகல் வணக்கம் | ஓவு |
| ஓவம் | சித்திரம் | படாம் |
| வட்டிகைச் செய்தி | கண்ணுள் வினைஞர் | ஓவியப்புலவன் |
| ஓவிய மாக்கள் | சித்திராங்கதன் | சித்திரசேனா |
| வட்டிகைப் பலகை | சித்திரமாடம் | எழுதுநிலை மண்டபம் |
| எழுதெழில் அம்பலம் | சித்திரக்கூடம் | சித்திரசபை |
| புனையா ஓவியம் | உத்தமம் | மத்திமம் |
| அதமம் | தசதாளம் | நவதாளம் |
| பஞ்சதாளம் | மகேந்திரவர்ம பல்லவன் | சித்திரகாரப்புலி |
| தட்சிணசித்திரம் | குகைக்கோயில் | தாமரைத் தடாகம் |
| ஆடல் அணங்குகள் | சித்தன்னவாசல் | |

**8. மனவரைபடம்** :

Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com




Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**9. தொகுத்தல் :**

மாணவர்களிடம் பழங்கால, சோழ, சேரர், பாண்டியர், நாயக்கர், மராட்டியர் கால ஓவியங்கள் காணப்படும் இடங்களை அட்டவணைப்படுத்தக் கூறுதல் :

| வ. எண் | காலம் | ஓவியம் காணப்படும் இடங்கள் |
|---|---|---|
| 1. | பழங்காலம் | பாறைகள், குகைகள். |
| 2. | சோழர் காலம் | தஞ்சைப் பெரிய கோயில் |
| 3. | சேரர் காலம் | திருநந்திக்கரை |
| 4. | பாண்டியர் காலம் | சித்தன்னவாசல் |
| 5. | நாயக்கர் காலம் | திருவரங்கம், திருப்பதி, மதுரை, காஞ்சி, தில்லை. |
| 6. | மராட்டியர் காலம் | ஓலை, கண்ணாடி, தந்த ஓவியங்கள் |

**10. வழங்குதல் :**

மாணவர்களைக் கீழ்கண்ட தலைப்புகளில் கருத்துகளைத் தொகுத்து வழங்கக் கூறுதல் :

1. ஓவியம் வரைவதற்கான வரைபடக் கருவிகள்
2. சங்ககால ஓவியங்கள்
3. தமிழர்களின் ஓவிய மரபு
4. சித்தன்னவாசல் ஓவியங்கள்
5. பல்லவர் கால ஓவிய வளர்ச்சி
6. கோயில் ஓவியங்கள்

**11. வலுவூட்டல் :**

மீத்திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டு மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

**12. மதிப்பீடு :**

1. ஓவியக்கலை எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டது?
2. கோட்டோவியங்கள் என்றால் என்ன?
3. வரைகருவிகள் சில கூறுக.
4. சித்திரகாரப்புலி என அழைக்கப்பட்டவர் யார்?
5. சித்தன்னவாசல் ஓவியங்களைத் தீட்டியவர் யார்?
6. சோழர்கால ஓவியங்கள் எங்கு காணப்படுகின்றன?
7. நடுகல் வணக்கம் என்றால் என்ன?

**13. குறைதீர்க் கற்பித்தல்:**

மனவரைபடத்தை ஒவ்வொரு மாணவராக விளக்கிக் கூறச் செய்தல்.

**14. வகையறி மதிப்பீடு:**

இதழ்களில் இடம்பெறும் ஓவியங்களைச் சேகரித்து படத்தொகுப்பு தயார் செய்.

**15. தொடர்பணி :**

வடபாதிமங்கலம் சிவன் கோயிலைச் சுற்றிப் பார்த்து அங்குக் காணப்படும் ஓவியங்களை உற்று நோக்கி வருக.

**16. நாள் :**

**17. ஆசிரியர் கையொப்பம் :**

**18. தலைமையாசிரியர் கையொப்பம் :**

Downloaded From www.nagaicollege.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com